உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 30.05.2026 • மலர் 04 • இதழ்: 150 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 30.05.2026 • Vol : 04 • Issue : 150 • Page : 4 • Rs. 5/-

### கென்பெட்வா நதி இணைப்பு திட்டத்தை பின்பற்றி

# நதி நீர் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

## மாநிலங்களுக்கு பிரதமர் மோடி வலியுறுத்தல்



புதுடெல்லி, மே. 30

கென் பெட்வா நதி இணைப்பு திட்டத்தை பின்பற் றி, மாநிலங் களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு மூலம் தீர்வு காணுங்கள் என மாநிலங் களை பிரதமர் மோடி அறி வுறுத்தியுள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் முயற்சிகளை தடை யின்றி ஒ ருங் கிணைப்பதன் மூலம், தி ட் டங்களை சரியான நே ரத் தில் செயல்படுத்து வ தை நோக்க மாகக் கொண்ட ஒரு தகவல் மற் றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த பன் முக த ளம் பிரகதி. இதன் 51வது கூட்டம் பிர த மர் மோடி த லைமை யில் நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் 9 மாநி லங்களை உள்ளடக் கிய ரயில்வே, மின்சாரம் மற்றும் சாலைத் துறை களைச் சே ர்ந்த சுமார் ரூ. 30 ஆயிரம் கோடி ம திப் பிலான 7 முக்கிய மான உள்கட்ட மைப்பு திட் டங்களை பிரதமர் மோடி ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறிய தாவது: பொதுத் திட்டங் க ளை செயல்படுத்துவ தி ல் ஏற்படு ம் தாமதம், தி ட் டச் செலவை அதிக ரி ப்பதோடு, அத்தியா வசியவசதிகள்மக்களுக்கு சரியானநேரத்தில்கிடைப் பதும் த டுக்கப்படுகிறது. எனவே, தி ட்டங்களை விரைவில் முடிக்க வேண் டு ம். நகரங்கள், குடி யிருப்பு பகுதிகள் மற்றும் பொது நிறுவனங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். மின்செலவை குறைக்க,

எரிசக்தி பாதுகாப்பை மே ம்படு த்த நகர்ப்புறங் களில் வீடு களின் மேற் கூரையில் சூரிய மின்சக்தி தகடுகள் அமைக்கும் திட் ட த்தை துரித ப்படுத்த வேண்டும்.

'தூய்மை இந்தியா இயக்கம் 2.0' திட்டம் மூலம் வெறும் உள்கட்ட மைப்பை உருவாக்கு வதோடு நின்றுவிடாமல், வழக்கமான கண் காணிப் பு, பொது ம க்களின் பங் களிப்பு மற்றும் பல்வேறு தரப் பினரின் ஒருங் கிணைப்பைஉறுதிசெய்ய வேண்டும். மாநிலங்கள் தங் களுக்கு இடையே யா ன நதிநீ ர் பிரச்சினை க ளை ஒத்துழைப்பு, சரி யான நேரத்தில் வழங்கப் படும் அ னுமதி கள் மற் றும் தொ ழில் நுட்பம் சா ர்ந்த க ண் காணிப்பு ஆகிய வ ற்றின் மூலம் தீர்க்க வேண்டும்.

இதற்கு மத்தியப் பிரதே சத்தின் கென் ஆற்றில் வரும் கூடுதல் நீரை, உத் த ர ப் பி ர தே ச த் தின் பெட்வாநதியில்இணைக் கு ம் கென் பெட்வா திட் டத்தை ஒரு முன்மாதிரி யாக பின்பற்ற வேண்டும். நதி க ள் இ ணைப் பு, நீர் பாதுகாப்பு, நிலத்தடி நீர் செறி வூட் டல் மற்றும் தி ற மை யான பா சனம் ஆ கி ய வ ற்றை ஒருங் கி ணைந்த முறையில் மே ற் கொண் டு, நீண்ட கா ல நீர் பாதுகாப்பை மாநிலங்கள் உறுதி செய்ய வேண்டும்.

இ வ்வா று அவர் கூறி னார்.

---

### கோவையில்

## 'ஜுவல் ஒன்' புதிய பிரம்மாண்ட ஃபிளாக்ஷிப் ஷோரூமை அந்நிறுவனத்தின் நிறுவனர் சீனிவாசன் திறந்து வைத்தார்



கோவை மே:30

தங்கம் மற்றும் வைர நகை வணிகத் தில் தரம்,பாரம்பரியம் மற்றும் வாடிக் கையாளர்களின் நம்பிக்கைக்குப் பெயர் பெற்ற ஜுவல் ஒன் நிறுவனம்,தனது புதிய பிரம்மாண்டமான ஃபிளாக்ஷிப் ஷோரூம் திறபு விழா கோவை கிராஸ் கட் சாலையில் நடைபெற்றதும்.

42 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்ப ரியம் கொண்ட எமரால்டு ஜுவல் இண் டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனத் தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே ஶ்ரீனிவாசன் தலைமை யில் திறப்பு விழா நடைபெற்றது . புதிய கட்டிடம்,நவீன வசதிகளுடன் உருவாக் கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்க ளுக்கு உலகத் தரம் வாய்ந்த ஷாப்பிங் அனுபவத்தை வழங்கும் வகையில்,5 தளங்களைக் கொண்ட இந்த ஷோரூமில் தனித்தனி பிரத்யேக பிரிவுகள் அமைக் கப்பட்டுள்ளன.அதில் தங்க நகைகளுக் கான "கோல்ட் கேலரி", வைர நகைக ளுக்கான "டைமண்ட் அட்லீயர்", மண ப்பெண் நகைகளுக்கான "ஃப்ரைடால் பவிலியன்", தனிப்பயன் நகை வடிவ மைப்புகளுக்கான "தி ஒன் லான்ச்", வெள்ளி நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களுக்கான "சில்வர்ஸ்டுடியோ" ஆகியவை இடம்பெற்றுள்ளன.

மேலும் 7 லட்சத்துக்கும் அதிகமான நகை வடிவமைப்புகள்,20க்கும் மேற் பட்ட மேம்பட்ட தொழில்நுட்ப வசதி கள்,100 சதவீதம் நம்பகத்தன்மை வாய்ந்த 916 ஹால்மார்க் தங்க நகைகள் மற்றும் வைர நகைகளுக்கான முழுமை யான எக்ஸ்சேஞ்ச் மதிப்பு உள்ளிட்ட பல் வேறு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. புதிய அடையாளத்துடன் பிரம்மாண்ட அனுபவத்தை வழங்கும் இந்த திறப்பு விழாவில் கோவையை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம் மற்றும் உள்வட்டம், சென்னப்பள்ளி தரப்பு, சின்னாறு வளைவு அருகில் சுமார் 4.30 மணி அளவில் வெங்கடாபுரம் கிராமம், மல்லப்பாடி அஞ்சல் பர்கூர் வட்டத்தை சார்ந்த .பத்தியப்பா த/பெ முனுசாமி வயது 50 என்ற நபர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும் போது சின்னார் யூட்டன் அருகில் ஒசூரில் இருந்து கிருஷ்ணகிரி நோக்கி சென்று கொண்டிருந்த போது லாரி வாகனம் மோதியதில் மேற்படி நபருக்கு தலையில் காயம் ஏற்பட்டது அந்த வழியாக வருகை தந்த கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ச.தினேஷ் குமார் காயம் ஏற்பட்ட நபருக்கு முதல் உதவி செய்து மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார் இந்த விபத்து சம்பந்தமாக சூளகிரி காவல் நிலையத்தினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

---

### விரைவாக தரிசனம் செய்ய தலா ரூ.1,000:

## பக்தர்களிடம் பணம் வசூலித்த அர்ச்சகர் சஸ்பெண்ட்: கோவிலுக்குள் பணி செய்ய தடை



தூத்துக்குடி, மே. 30

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் சாதாரண உடையில் முககவசம் அணிந்து திடீர் ஆய்வு செய்தார். இதன்படி கோவில் வளாகம், அன்ன தானம் கூடம், முடி காணிக்கை செலுத்தும் இடம், தரி சன வரிசை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ஆய்வு செய்தார். பின்னர் பக்தருடன் சேர்ந்து அன்னதானம் சாப்பிட்டு அன்னதான உணவின் தரம் குறித்தும் பக்தர் களிடம் கேட்டறிந்தார். இதனைத்தொடர்ந்து தரிசன வரிசையில் ஆய்வு செய்தபோது அமைச்சர் என்று தெரி யாமல் அர்ச்சகர் ஒருவர் விரைவாக தரிசனம் செய்ய தலா ரூ. 1,000 என 4 பேருக்கு ரூபாய் 4,000 கேட்டுள் ளார். அதற்கு அமைச்சர் கையில் பணம் இல்லை என்று சொல்லியதால் ஜிபேயில் அனுப்புங்கள் என்று அந்த அர்ச்சகர் கேட்டு பெற்றுள்ளார். இந்த விவகாரத்தில், முறைகேட்டில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளை சஸ் பெண்ட் செய்து அமைச்சர் ரமேஷ் உத்தரவு பிறப்பித்துள்ளார். விரைவு தரிசனத்திற்காக பணம் பெற்ற அர்ச்சகர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ள நிலை யில், அர்ச்சகருடன் சேர்ந்து முறைகேட்டிற்கு உடந்தை யாக இருந்த 2 ராணுவ வீரர்கள் பணியிடை நீக்கம் செய் யப்பட்டுள்ளனர். அதே போல, முடி காணிக்கை செலுத்த வரும் பக்தர்களிடம் பணம் கேட்ட 2 பணியா ளர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப் பில் கூறப்பட்டுள்ளதாவது: இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணி சுவாமி திருக்கோவிலில் இன்று (29.06.2026) ஆய்வு மேற்கொண்டதில் திருக்கோயிலின் சண்முக விலாசம் முகப்பில் பாது காப்பு பணிபுரியும் முன்னாள் ராணுவத்தினர் கருப்ப சாமி மற்றும் தோப்பு ஆகியோர் திருக்கோவில் திரிசுதந் திரரிடம் பணம் பெற்றுக்கொண்டு முறைகேடாக பக்தர்களை அனுமதித்தது தெரியவந்தது எனவே உள் துறையில் பணிபுரியும் முன்னாள் ராணுவ வீரர்கள் இரண்டு நபர்கள் பாதுகாப்பு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரிவிக்கப்படு கிறது இனி வரும் காலங்களில் மேற்குறிப்பிட்ட முன் னாள் ராணுவ வீரர்களை அத்திருக்கோவிலில் எவ்வி தப்பணிக்கும் அனுமதிக்கக் கூடாது என்று தெரிவிக்க ப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

---

## குமரி மலையோர பகுதிகளில் மழை : திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு



நாகர்கோவில் மே 30

கன்னியாகுமரி மாவட்ட மலையோர பகுதிகளில் பெய்து வரும் மழை காரண மாக ஆறுகளில் தண்ணீர் வரத்து அதிக ரித்து வருகிறது. இதனால் திற்பரப்பு சுற் றுலா தலத்தில் கட் டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளது. கோடை விடு முறை முடிவுக்கு வரும் நிலையில் சுற் றுலா பயணிகள் கூட்டம் அதிகம் காணப் படுகிறது. அவ்வப்போது லேசான மழை பெய்தாலும் இதமான காலநிலை நிலவி யது. இதனால் சுற்றுலா பயணிகள் உற்சா கமடைந்தனர். கோதையார் உட்பட ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் தடுப்பணை பகுதியில் இறங் கவே, குளிக்கவோ, மது அருந்தவோ கூடாது, மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலா பயணிக ளுக்கு கடையால் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது. குமரி மாவட்டத்தில் மலை பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வரும் நிலையில் கோதையாறு போன்ற ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதேப் போன்று மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிக ளின் லேசானது முதல் மிதமான மழை பதிவானது.திற்பரப்பு, குலசேகரம், பேச்சிப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் நேற்றும் அவ்வப்போது மித மான அளவிலும், மற்ற நேரங்களில் லேசான அளவிலும் தொடர்ந்து மழை பெய்தது.

நேற்று முன்தினம் காலை திற்பரப்பு அருவியில் தண்ணீர் வரத்து குறை வாகவே காணப்பட்டது. தொடர்ந்து பெய்த மழை காரணமாக மதியத்துடன் தண்ணீர் வரத்து கூடியது. பாதுகாப்பான நிலையில் நேற்று தண்ணீர் வரத்து காணப்பட்டாலும், மழை தொடர்ந்து பெய்து வந்ததால் அருவியின் ஒரு பகுதி யில் மட்டும் பாது காப்பு கருதி சுற்றுலா பயணிகளை குளிக்க அனுமதிக்க வில்லை. மற்ற பகுதிகளில் குளிக்க அனு மதிக்கப்பட்டனர்.

---

## மூன்று மத குருமார்களையும் வைத்து எம்எல்ஏ அலுவலகத்தை திறந்தார்; அமைச்சர் சம்பத்குமார்



கோவை மே:30

த மி ழ் ந ா டு பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சரும் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரு மான சம்பத்குமார் மூன்று மதகுருமார்களைகொண்டு எம்எல்ஏ அலுவலகத்தை திறந்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிந்ததை தொடர்ந்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவரவர்களுக் கான சட்டமன்ற அலுவலகங்கள் புதுப் பிக்கப்பட்டு திறக்கப்படுகிறது. அனை த்து சட்டமன்ற உறுப்பினர்களும் சட்ட மன்ற அலுவலகங்கள் புதுப்பிக்கப்பட்ட வுடன் அதனை திறந்து வைத்து எம்எல்ஏ பணிகளை ஆற்றி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச் சரும் கோவை வடக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான சம்பத்குமார் க்கான வடக்கு தொகுதி சட்டமன்ற அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு இன்று திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் சம்பத்கு மார் இந்து கிறிஸ்த்துவம் இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களையும் ஏற்றுக் கொள்ளும் விதமாக மூன்று மத குரு மார்களை வைத்து சட்டமன்ற அலுவ லகத்தை திறந்தார். பின்னர் மூன்று பேரிடமும் ஆசி பெற்று அலுவலகத் தில் அவரது பணிகளை துவக்கினார்.

இந்நிகழ்வில் சூலூர் சட்டமன்ற உ று ப் பி ன ர் சுகுமார்,கவுண்டம்பாளையம் சட்ட மன்ற உறுப்பினர் கனிமொழி சந் தோஷ் ஆகியோரும் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண் டனர்.

மேலும் இந்த நிகழ்வில் தூய்மை பணியாளர் சக்திவேலை அமைச்சர் சம் பத்குமார் பாராட்டி பரிசுகளை வழங்கி னார்.தூய்மை பணியாளர் சக்திவேல் உரிமையாளர் தவறவிட்ட மூன்று பவுன் தங்கச் சங்கிலியை உரிமையாள ரிடமே மீட்டுக் கொடுத்தவர் என்பதும் அவரது செயலை மாநகராட்சி ஆணை யாளர் உட்பட பலரும் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.



## தஞ்சாவூர் பெரிய கோவிலில்

# கோட்டை சுவர் தூய்மை பணி நிறுத்தம்; மாவட்ட நிர்வாகம் தொல்லியல் துறை இடையே கருத்து மோதல்

தஞ்சாவூர் பிப்ரவரி 30

தஞ்சாவூர் பெரிய கோவில் கோட்டைச்சுவர் தூய்மை பணி பாதியில் நிறுத்தப்பட்ட நிலையில் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொல்லியல் துறைக்கும்இடையே கருத்து மோதல் வலுவடைந்து வருகிறது.

உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றான தஞ்சாவூர் பெரிய கோவிலை சுற்றி உள்ள அகழியில் தூய்மை பணி மே 16ஆம் தேதி தொடங்கி நிறைவடைந்துள்ளது.இது நிறைய கோயிலை சுற்றி 16ஆம் நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சி காலத்தில் எழுப்பப்பட்ட கோட்டை சுவரில் வளர்ந்துள்ள செடிகள் மரங்களை அகற்றி தூய்மைப்படுத்தும் பணி தொடங்க ப்பட்டது .ஆனால் கட்டுமானம் பாதிக் கப்படுவதாக கூறி இப்பணியை நிறுத்துமாறு மாவட்ட நிர்வாகத்திடம் , இந்திய தொல்லியல் துறையினர் தெரிவித்தனர். இதையடுத்து கோட்டை சுவரின் தூய்மை பணி நிறுத்தப்பட்டது.

மேலும் கோயில் மராட்ட வாயிலுக்கு முன்பு சுற்றுலா பயணிகள் பக்தர்களுக்கான கட்டணம் இல்லா காலணிகள் வைப்பகம் மே 26 ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயிலின் மாவட்ட நிர்வாகம் சார்பில் கட்டணம் இல்லாத காலணிகள் வைப்பதும் அமைக்கப்பட்டது. இது குறித்து கலெக்டருக்கு விளக்கம் கேட்டு தொல்லியல் துறை நோட்டீஸ் அனுப்பியதாக கூறப்படுகிறது.இந்த இரு பிரச்சனைகள் மாவட்ட நிர்வாகத்துக்கும் தொல்லியல் துறைக்கு இடையே கருத்து மோதல் வலுவடைந்து வருகிறது.

இந்த நிலையில் அகழியில் மேற்கொள்ளப்பட்ட தூய்மை பணி குறித்து தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினர் ச. முரசொலி ஆய்வு செய்தார் .இவருடன் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், இந்திய தொல்லிய ல் துறை அலுவலர்கள் சென்றனர்.

அப்போது மக்களவை உறுப்பினர் தூய்மைப்பணி இந்திய தொல்லிய ல் துறைஇடையூறாகஇருப்பதாகமாவட்ட கலெக்டர் கூறினார். இதற்கு பதில் அளித்த தொல்லியல் துறை அலுவலர்களிடம் மாவட்ட நிர்வாகத்தின் முயற்சிக்கு தலை மையகத்தில் பேசி உரிய அனுமதியை பெற்றுத் தருமாறு மக்களவை உறுப்பினர் அறிவுரை வழங்கினார்.

மேலும் தொல்லியல் துறை அலுவலரிடம் இந்த கோயில் சிதைந்துள்ள கல்வெட்டுகளை சீரமைக்கு முன் வரவில்லை. இதுபோல கட்டுமானங்களிலும் சேதமடைந்து வருகிறது, கோட்டை ச் சுவரில் வளர்ந்துள்ள மரங்களால் கோபுரம் மறைக்கிறது கோட்டை சுவர் வளர்ந்துள்ள மரங்கள் கோபுரத்தை மறைக்கிறது அதை அகற்றவில்லை கோபுரம் கருப்பாக மாறி வருவதையும் சுத்தம் செய்ய வில்லை, வராகி அம்மன் சன்னதி அருகே அபிஷேக நீர் வெளியேறி தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதையும் தடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை.

இதையெல்லாம் விட்டுவிட்டு இந்து ஆகமத்துக்கு எதிராக கோபுர வாசலை கடந்து காலணிகள் பாது காப்பகம் எப்படி அமைத்தீர்கள்? அதை ஏன் வாயிலுக்கு வெளியில் அமைக்கவில்லை, என மாவட்ட நிர்வாகத்தின் முயற்சிக்கு தொல்லியல் துறை முட்டுக்கட்டையாக இருப்பது ஏன் என மாவட்ட கலெக்டர் கேள்வி எழுப்பினார் .

இதுகுறித்து தொல்லியல் துறை அலுவலர்கள் விளக்கம் அளிக்கை யில் அகழியில் சுத்தம் செய்யும் போது பொக்லின் இயந்திரம்மூலம்சுண்ணாம்புபாறையை வெட்டி சிதைத்துள்ளனர் .இதனால் கோவில் கட்டுமானத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அச்சம் ஏற்பட்டுள்ளது. ராஜ ராஜ சோழன் சிலை பகுதியை சுத்தம் செய்து வாகனங்களை நிறுத்தி மாவட்ட நிர்வாகம் கட்டணம் வசூலித்துள்ளது. இந்திய தொல்லியல் துறையில் உயர் அலுவலர்களை மாவட்ட கலெக்டர் தொடர்பு கொண்டு உரிய அனுமதி பெற்று பணிகளை தொடங்கினால் கீழ் நிலையில் உள்ள நாங்கள் தடுக்க மாட்டோம், ஆனால் மாவட்ட கலெக்டர் எங்களிடம் கூறி நீங்களாகவே அனுமதி பெற்று தாருங்கள் என்று கூறுகிறார். நாங்கள் உயர் அதிகாரியிடம் கேட்டால் தொல்லியல்துறையின்விதிகளுக்கு உட்பட்டு செயல்படுமாறு கூறுகின்றனர்.. இதெல்லாம் நாங்கள் இருபுறமும் பதில் கூற முடியாமல் வேதனையில் உள்ளோம் என்றார்.

பின்னர் கோயிலுக்குள் மக்களவை உறுப்பினர், தொல்லியல் துறை அலுவலர்களை மாவட்ட கலெக்டர் அழைத்துச் சென்றார்.



## அருமனையில்

# பூட்டிய மதுக்கடை 13 நாட்களுக்கு பின் திறப்பு; பொதுமக்கள் போராட்டம்

மார்த்தாண்டம், மே.30

குமரி மாவட்டம் அருமனை பகுதியில் பொதுமக்கள் எதிர்ப்பை தொடர்ந்து மூடப்பட்ட டாஸ்மாக் கடை நேற்று திடீரென மீண்டும் திறக்கப்பட்டதால் அனைத்து கட்சியினரும் கடையை முற்றுகையிட்டு மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் பள்ளி, பேருந்து நிலையம் மற்றும் தேவாலயங்கள் அருகே செயல்பட்டு வந்த டாஸ்மாக் கடைகளில் 717 கடைகள் மூடப்படும் என தமிழக முதல்வர் அறிவித்திருந்த நிலையில், இந்த மாதம் 18ஆம் தேதி அருமனை டாஸ்மாக் கடையை மூட வேண்டும் என பெண்கள் உட்பட பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்தினர். அருமனை பகுதி எப்போதும் மக்கள் நெரிசல் அதிகமாக காணப்படும் பகுதியாகும். அப்போது சம்பவ இடத்திற்கு வந்த டாஸ்மாக் அதிகாரிகள் கடையை நிரந்தரமாக மூடுவதாக அறிவித்ததை தொடர்ந்து கடை மூடப்பட்டது.

இந்தநிலையில் நேற்று 13 நாட்களுக்கு பிறகு திடீரென மீண்டும் கடை திறக்கப்பட்டு விற்பனைக்கு தயாரானதால் பாஜக, அதிமுக, காங்கிரஸ், ஜனதாதளம் உள்ளிட்ட அனைத்து கட்சியினரும் கடை முன்பு திரண்டு மீண்டும் போராட்டத்தை துவக்கினர்.

இதற்கிடையில் மது வாங்க வந்தவர்களை போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தியதால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தகவலறிந்து வந்த போலீசார் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தினர். தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஆனால் பேச்சுவார்த்தைக்கு டாஸ்மாக் உயர் அதிகாரிகள் யாரும் சம்பவ இடததில் வரவில்லை என்று புகார் எழுந்துள்ளது. இதனால் பொதுமக்கள் டாஸ்மாக் கடை முன்பு அமர்ந்திருந்து இந்த கடை நிரந்தரமாக பூட்டும் வரை கடையை திறக்க அனுமதிக்க மாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தூத்துக்குடி:

# தடுப்புச்சுவரில் மோதிய கார் கவிழ்ந்து விபத்து 2 பேர் படுகாயம்



தூத்துக்குடி, மே 30

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ராகுல். இவர் தனது நண்பர் ஒருவருடன் நேற்று இரவு தனது காரில் திருநெல்வேலியில் இருந்து தூத்துக்குடி நோக்கி பிராந்திய நெடுஞ்சாலையில் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார். அந்த கார் தூத்துக்குடி புறநகர் பகுதியான மறவன்மடம் அருகே வந்தபோது, எதிர்பாராதவிதமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக ஓடியது. வேகமாக சென்ற அந்த கார், சாலையோரம் இருந்த சிமெண்ட் தடுப்புச்சுவர் மீது பலமாக மோதி, அடுத்த விநாடியே நடுரோட்டில் தலைகீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

மோதிய வேகத்தில் காரின் முன் பகுதியில் இருந்து கரும்புகை கிளம்பி, சிறிது நேரத்தில் கார் முழுவதும் தீப்பற்றி எரியத் தொடங்கியது. கார்தீப்பற்றி எரிவதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள், உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அவர்கள் தங்களின் உயிரையும் பொருட்படுத்தாமல், கவிழ்ந்து கிடந்த காரின் கதவுகளை உடைத்து, உள்ளே சிக்கியிருந்த ராகுல் உள்ளிட்ட 2 பேரையும் தீப்பொறிகள் சூழ்வதற்குள் பத்திரமாக வெளியே இழுத்து மீட்டனர். பொதுமக்கள் மீட்ட அடுத்த சில நிமிடங்களிலேயே கார் முழுமையாக தீக்கிரையாகி உருக்குலைந்தது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ராகுல் மற்றும் அவரது நண்பருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, பின்னர் அவசர சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவர்களின் கண்காணிப்பில் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த கார் விபத்து குறித்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், புதுக்கோட்டை காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று வழக்குப்பதிவு செய்து,விபத்துக்கானகாரணம்குறித்துதீவிரவிசாரணை நடத்தி வருகின்றனர். தேசிய நெடுஞ்சாலையில் கார் கவிழ்ந்து தீப்பற்றி எரிந்த இந்த விபத்துச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மதுரை அருகே துணிகரம்:

# வீடு புகுந்து 80 பவுன் நகைகள் கொள்ளை

அலங்காநல்லூர், மே. 30

மதுரை அருகே பொதும்பு வானவில் நகரை சேர்ந்த வர்சதீஷ்(வயது37).வெளிநாட்டில்ஐ.டி.நிறுவனத்தில் பணியாற்றி வரும் இவர், தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வந்துள்ளார்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு குடும்பத்துடன் உறவினர் வீட்டிற்கு சென்றிருந்த நிலையில், வீடு பூட்டப்பட்டிருந்தது. இதை நோட்டமிட்ட மர்ம நபர்கள் வீட்டிற்குள் புகுந்து பீரோவை உடைத்து அதில் வைக்கப்பட்டிருந்த 80 பவுன் தங்க நகைகள், ரூ.5 லட்சம் மதிப்பிலான அமெரிக்க டாலர்கள், செல்போன்கள் மற்றும் பிற பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

வீட்டிற்கு திரும்பிய குடும்பத்தினர், வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறி கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து மதுரை மாவட்ட போலீஸ் துணை சூப்பிரண்டு (பொறுப்பு) ஸ்ரீநாதன், சமயநல்லூர் துணை சூப்பிரண்டு ஆனந்தராஜ் மற்றும் அலங்காநல்லூர் போலீசார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

மேலும், கைவரிசை காட்டிய கொள்ளையர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

# கோவில்களில் முறைகேடுகளைத் தவிர்க்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்: வானதி சீனிவாசன்



சென்னை, மே. 30

தேசிய பாஜக மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவி த்திருப்ப தாவது:

திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமிகோவிலில் இன்று காலை ஆய்வுப் பணிக்காக சென்ற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷிடம் அமைச்சர் என்று தெரியாமல் விரைவு தரிசனம் செய்ய அங்குள்ள அர்ச்சகர் ஒருவர் ரூ.4,000 கேட்டதாக வெளியான செய்தி கோவில் நிர்வாகத்தின் முகத்திரையை கிழித்துள்ளது.

கையில் பணம் இல்லை என்றால் ஆன்லைன் முறையில் கூட கொடுங்கள் என்றும் கேட்பதாக கூறப்படுவது எந்த அளவிற்கு அங்கு லஞ்சம் புரையோடிப் போயிருப்பதை காட்டுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. கடந்த வாரம் கூட திருச்செந்தூர் கோவிலில் நடக்கும் லஞ்சம் மற்றும் கட்டணக் கொள்ளை குறித்து நான் பதிவு செய்திருந்த நிலையில் அதனை மெய்ப்பிக்கும் விதமாக இன்று அமைச்சரிடமே லஞ்சம் கேட்ட செய்தி அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது.

திருச்செந்தூரில் மட்டுமல்ல தமிழகத்தின் பல முக்கிய கோவில்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது தொடர்கதையாகி வருவதை செய்திகள் உறுதிபடுத்திக் கொண்டிருக்கிறது. இனிமேலாவது கோவில்களில் பக்தர்கள்மனநிம்மதியுடன்தரிசனம்செய்வதற்குஏதுவாக இதுபோன்ற முறைகேடுகளைத் தவிர்க்கும் வகையில் கடுமையானநடவடிக்கைஎடுக்கஇந்துசமயஅறநிலையத் துறையை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் தேரோட்டம்; திரளான பக்தர்கள் பங்கேற்பு

கன்னியாகுமரி,மே.30

பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பெருந்திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான வைகாசி பெருந்திருவிழா கடந்த 21 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த திருவிழா இன்று (சனிக்கிழமை) வரை தொடர்ந்து நடைபெற்று வந்தது. திருவிழாவையொட்டி தினமும் அபிஷேகமும், 11.30மணிக்குஅவங்காரதீபாராதனையும், நண்பகல் 12 மணிக்கு சிறப்பு அன்னதானமும், மாலை சமய உரையும், இரவு இன்னிசை கசச்சேரியும்,இரவு 9 மணிக்கு அம்மன் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடந்தது வந்தது.

9 ஆம் திருவிழாவான நேற்று (வெள்ளிக்கிழமை) காலையில் தேரோட்டம் நடைபெற்றது. இதையொட்டி கோவிலில் இருந்து காலை 9.15 மணிக்கு வெள்ளி பல்லக்கில் உற்சவ அம்மனை அலங்கரித்து சன்னதி தெரு, கன்னியம்பலம் மண்டபம், தெற்கு ரதவீதி, நடுத்தெரு வழியாக தேர் நிற்கும் கீழரத வீதிக்கு மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து சென்றனர். அதன் பிறகு உற்சவ அம்மனை பட்டு மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளச் செய்தனர்.

அதைத்தொடாந்து தேரில் எழுந்தருளி இருந்த அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் விசேஷ தீபாராதனை போன்றவை நடைபெற்றது. தொடர்ந்து 10 மணிக்கு திருத்தேர் வடம் தொட்டு இழுத்து தேரோட்டம் தொடங்கி வைத்த நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் தளவாய்சுந்தரம் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டுதர்வடம்தொட்டு தொடங்கி வைத்தார். குமரி மாவட்ட திருக்கோவில்களின் இணை ஆணையர் ஜான்சிராணி, நாகர்கோவில் தேவசம் தொகுதி கோவில்களின் கண்காணிப்பாளர் ஆனந்தன், கோவில் மேலாளர் ஆனந்த் உட்பட பக்தர்களும், திரளான சுற்றுலா பயணிகளும் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்து இழுத்தனர். ரத வீதி வழிநெடுகிலும் பக்தர்கள் உயரமான கட்டிடங்களில் இருந்து தேரின் மீது மலர் தூவி வரவேற்று வழிபட்டனர். தேரோட்ட நிகழ்ச்சியில் சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு காலை 10 மணி வரை படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு இருந்தது. 10 மணிக்கு பிறகு போக்குவரத்து வழக்கம்போல் தொடங்கி நடைபெற்றது.

10ம் திருவிழாவான இன்று (சனிக்கிழமை) அதிகாலை 6.15 மணிக்கு மேல் 7 மணிக்குள் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது. பின்னர் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகமும். 12 மணிக்கு சிறப்பு அன்னதானமும் நடக்கிறது. மாலை 5 மணிக்கு மண்டகப்படி நிகழ்ச்சியும்,6 மணிக்கு ஆன்மீக உரையும். இரவு 8 மணிக்கு நர்த்தன பஜனையும் நடக்கிறது. இரவு 9 மணிக்கு தெப்பத்திருவிழா நடக்கிறது. நள்ளிரவு 11 மணிக்கு முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்திருந்தது.

# "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா சி.எம் சார்?" விஜய் மீது உதயநிதி சாடல்

சென்னை, மே. 30

"சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா? நீங்கள் டைம் எடுத்து கற்றுக் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வரை தமிழ்நாடு தாங்காது சி.எம் சார்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "கடலூரில் 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியை எற்படுத்துகிறது. இப்படி தொடர்ச்சியாக நடக்கும் குற்றச் சம்பவங்களை பார்க்கும்போது, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா, இல்லையா என மக்களுக்கு சந்தேகம் வருகிறது. இந்த சோஃபா மாடல் (Sofa Model) அரசு அமைந்தது முதல், கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை என இப்படி குற்றங்கள் நடக்காத நாளே இல்லை. தேர்தல் பிரச்சாரத்தில் பக்கம் பக்கமாக பேப்பர் வைத்து, சட்டம் ஒழுங்கு பற்றி வாய்கிழிய பஞ்ச் டயலாக் பேசியவர், முதல்வர் ஆனதும் 'டீப் ஸ்லீப் மோடு'க்கு சென்றுவிட்டார்.

# தருமபுரி பழைய பேருந்து நிலைய பிரச்சனைக்கு தேவைப்பட்டால் முதல்வரை சந்திப்பேன்

## சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி பேட்டி



தருமபுரி மே 30

தருமபுரியில் கடந்த பிப்ரவரி மாதம் ஐந்தாம் தேதி புதிய பேருந்து நிலையம் துவக்கப்பட்டது. துவக்கப்பட்ட நாளிலிருந்து 4 மாதங்களாக தருமபுரி பொதுமக்கள் மற்றும் பழைய பேருந்து நிலைய வணிகர்கள் பல்வேறு பிரச்சனைகளை அனுபவித்து வருகின்றனர். இதுகுறித்து தருமபுரி பழைய பேருந்து நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி பொதுமக்கள் மற்றும் பேருந்து நிலைய வணிகர்கள் இடையே பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கடந்த நான்கு மாதங்களாக வணிகர்கள், பொதுமக்கள் பல்வேறு கட்ட பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டுள்ளார்கள். ஒரே இரவில் புதிய பேருந்து நிலையம் மாற்றம் செய்ய முடியும் போது, ஒரே இரவில் பழைய பேருந்து நிலையத்திற்கு பேருந்துகளை கொண்டு வர முடியாதா இது தொடர்பாக பாமக தலைவர் அன்புமணி அறிக்கை வெளியிட்டார். பழைய பேருந்து நிலையத்திற்கு அனைத்து பேருந்துகளும் வரச் செய்வோம். பேருந்துகள் சரியான நேரத்திற்கு எடுக்க முடியவில்லை .போக்குவரத்து நெரிசல் டீசல் செலவு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் பொதுமக்கள் நலனை கருத்தில் கொள்ள வேண்டும். பழைய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். நிறைய கருத்துக்களை சொல்லி உள்ளனர் 30 பேருந்துகள் வரவேண்டிய இடத்தில் இரண்டு பேருந்துகள் மட்டுமே வருகிறது. பாமக தலைவரின் அறிக்கை பிறகு மாவட்ட ஆட்சியர் மாவட்டத்திற்குள் செல்கின்ற அனைத்து பேருந்துகளும் பழைய பேருந்து நிலையத்திற்கு வரும் என உத்தரவிட்டார். ஆனால் அதன்படி வரவில்லை நேரம் காப்பாளர் அலுவலகம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ளதால், அதனை பழைய பேருந்து நிலையத்திற்கு மாற்ற வேண்டும். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர்களே பேருந்துகளை இங்கே நிறுத்தக்கூடாது. புதிய பேருந்து நிலையத்திற்குசெல்லுங்கள்எனகூறுகின்றனர். மேலும் அபராதம் விதிப்பதாக தெரிவிக்கின்றனர். மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கு மதிப்பில்லையா என வினா எழுப்பினார். வியாபாரிகள், பொதுமக்கள், வணிகர்கள் மனக்குமுறலில் உள்ளனர். பழையபடி பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திற்கு வரவேண்டும் இல்லாவிட்டால் போராட்டங்களை நடத்த உள்ளதாக தெரிவித்த அவர் இது தொடர்பாக முதல்வரையும் சந்திக்க உள்ளதாக தெரிவித்தார்.



தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

## 10ம் வகுப்பு பிளஸ் 2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்; முரசொலி எம்பி வழங்கினார்

தஞ்சாவூர் மே 30

தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவ மாணவிகளுக்கு முரசொலி எம்பி பாராட்டு விழா நடைபெற்றது

இதற்கு மாவட்ட கல்வி அலுவலர்கள் மாதவன் (அரசு பள்ளிகள்) செந்தில் (தனியார் பள்ளிகள்) ஆகியோர் தலைமை வகித்தனர் விழாவில் தஞ்சாவூர் தொகுதி முரசொலி எம்பி மாணவ மாணவி கள் 174 பேருக்கு பதக்கம் வழங்கி அணிவித்து, பாராட்டு சான்றிதழ், பேக், தண்ணீர் பாட்டில் வழங்கினார்

முன்னதாக தஞ்சாவூர் பனங்கல்கட்டிட வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ரூபாய் 5 கோடியே 98 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டும் பணியை முரசொலி எம்பி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## சிங்கிலிபட்டி மற்றும் கல்குமி வடக்குவா செல்விஅம்மன், அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோவில் கோவில் கொடை விழா



விளாத்திகுளம் மே 30.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே 14 க்கும் மேற்பட்ட சமுதாயங்கள் இணைந்து பல நூற்றாண்டு காலமாக இணைந்து சமுதாய பாகுபாடின்றி வடக்குவாசெல்வி அம்மன் மற்றும் செல்வவி நாயகர், அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோவில் கோவில் கொடை விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வடக்குவாசெல்வி அம்மன் கோவிலில் இருந்து மஞ்சள் நீர் குடம் எடுத்து ஊர் கண்மாய்க்கு சென்று பக்தர்களுக்கு அருள் ஏற்றி, அக்னி சட்டி எடுத்து ஊர்வலமாக வந்து வடக்குவா செல்வி அம்மன் கோவில் முதல் அடைக்கலம் காத்த அய்யனார் கோவில் வரை சென்று கோவில் கொடை சிறப்பாக தொடங்கியது.

இந்த நிகழ்வில் சிங்கிலிபட்டி கிராம தர்மகத்தா முத்துக்கண்ணன், கல்குமி கிராம தர்மகத்தா திருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆவுடையப்பன், சீத்தாராமன், செல்லக்குமார் மற்றும் ஊர் பொதுமக்கள் பக்தர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில்

## காவல்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்: ஆய்வுக் கூட்டத்தில் கலெக்டர் சதீஷ் அறிவுறுத்தல்



தருமபுரி மே 30

தருமபுரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அவர் கூறியதாவது. தருமபுரி மாவட்டத்தில் வாகன விபத்துக்கள் தடுக்க சாலை விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும். இருசக்கர வாகன ஓட்டிகள் அனைவரும் ஹெல்மெட் அணிவதை உறுதி செய்ய வேண்டும். சாலைகளில் அதிக வேகத்தில் வாகனங்களை இயக்குவதை தடுக்க தொடர் கண்காணிப்பு பணி மேற்கொள்ள வேண்டும்.

சாலை விதிகளை முறையாக பின்பற்றி எதிர்பாராத விதமாக நடக்கும் சாலை விபத்துக்களை தவிர்ப்பது குறித்து போக்குவரத்து துறை, காவல் துறை உள்பட தொடர்புடைய துறை அலுவலர்களும், பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் விபத்தில்லா தரேமபுரி மாவட்டம் என்ற நிலையை உருவாக்குவதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு முன்னெச்சரிக்கைமற்றும்விழிப்புணர்வு நடவடிக்கைகள்தீவிரமாகமேற்கொள்ள வேண்டும்.

விபத்துகளை தவிர்க்க அபாயகரமான வளைவுகள் ,போதிய வெளிச்சம் இல்லாத பகுதிகள் மற்றும் முக்கிய சந்திப்புக்களில் வேகத்தடைகள், எச்சரிக்கை பலகைகள் மற்றும் மின்விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் .ஹெல்மெட் அணியாமல் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் ,மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டுவோர் மற்றும் சாலை விதிகளை தொடர்ச்சியாக மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் . இவ்வாறு ஆட்சியர் கூறினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா ,கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சோமசுந்தரம் ,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா உள்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தேனி, மே. 30

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் (29.05.2026) நடைபெற்றது.

மாவட்டத்தில் மே மாதம் வரை ஆண்டு மழையளவான 276.6 மி.மீக்கு தற்பொழுது வரை 200.03 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது மே மாதம் வரை ஆண்டு இயல்பான மழையளவில் 76.57 மி.மீ குறைவாகும். மே 2026 மாதத்திற்கான இயல்பு மழையளவான 64.5 மி.மீக்கு தற்பொழுது வரை 88.06 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது மே மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 23.56 மி.மீ அதிகமாகும். தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 380 ஹெக்டர் பரப்பிலும், சிறுதான்யம் 54 ஹெக்டர் பரப்பிலும், பயறு வகைகள் 115 ஹெக்டர் பரப்பிலும், தோட்டக் கலை பயிர்களான பழப்பயிர்கள் 7366 ஹெக்டர் பரப்பிலும், காய்கறி பயிர்கள் 146 ஹெக்டர் பரப்பிலும், மலைத் தோட்ட பயிர்கள் 11044 ஹெக்டர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 1738 ஹெக்டர் பரப்பிலும், மலர்ப்பயிர்கள் 525 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 71 மெ.டன்னும், சிறுதானியங்கள் 6 மெ.டன்னும், பயறு வகை விதைகள் 9 மெ.டன்னும், எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் 1.2 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. துவரை பயிரானது நடவு தொழில் நுட்பத்தின் அடிப்படையில் சாகுபடி செய்யும் பொழுது மகசூல் அதிகரிக்கும் என ஆய்வுகள் முடிவுகள் தெரிவிக்கப் பட்டதைத்தொடர்ந்து, நடப்பாண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நடவு தொழில்நுட்பம் மூலமாக துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூபாய் 10,000 வரைமானியம் வழங்கப்படஉள்ளது.

தேனி மாவட்டத்தில் பாரதப் பிரதமரின் கௌரவ நிதி பெரும் திட்டத்தின் கீழ் மொத்தம் உள்ள 26050 பயனாளிகளில் இதுவரை 23,550 பயனாளிகள் மட்டுமே விவசாய அடையாள எண் பெற்றுள்ளார்கள். மீதமுள்ள பிற விவசாயிகளும் கௌரவ நிதித்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயனடைய உடனடியாக விவசாய அடையாள எண்ணை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் 15 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் என்றும், டி.ஏ.பி மற்றும் பொட்டாஷ் உரங்கள் அனைத்து கடைகளிலும் இருப்பு வைக்கப்படும் என்றும், உரங்களின் விலை கூடுதலாக விற்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய பதிலினை விவசாயிகளுக்கு வழங்கிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், மாவட்ட வன அலுவலர் ஜி.கிரண், உதவி வன பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி வேளாண்மை இணைஇயக்குநர்சாந்தாமணி, இணைப் பதிவாளர் (கூட்டுறவு) திருமதி நர்மதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜெரால்டு அலெக்சாண்டர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) இரா.வளர்மதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட அளவிலான மணல் ஒருங்கிணைப்புக்குழுகூட்டம்மாவட்டஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார்தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி ., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது . கிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் .அபிநயா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .வேலுமணி, உதவி இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை .இளங்கோவன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## கோவை கொடிசியா இன்டெக் 2026 கண்காட்சி




கோவை மே:30

கோவை கொடிசியா இன்டெக் கண்காட்சியானது மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு தொழில் கண்காட்சியாகும். கோவைதனது ஒரு தொழில் உற்பத்தி மையமாகவும் ஆட்டோமோட்டிவ், ஏரோஸ்பேஸ், பொறியியல், வேதியியல் மற்றும் இவை சார்ந்த துறைகளுக்கு தொழில் சேவை வழங்கும் மையமாகவும், தொழில் புத்தாக்கம் நிறைந்த ஒரு பகுதியாக மாறவும் இந்த கண்காட்சியானது தனது முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது.

தொழில் சார்ந்த பங்கேற்பாளர்கள், கண்காட்சியாளர்கள் மற்றும் கலந்துகொள்பவர்களுக்கு பெரும் பயன் அளிக்கும் வகையில் 20 பதிப்புகளை நிறைவு செய்த ஒரு கண்காட்சியாக இந்த இன்டெக் கண்காட்சி திகழ்கிறது.

இந்த இன்டெக் 2026 எனும் சர்வதேச இயந்திர மற்றும் பொறியியல் தொழில் கண்காட்சியின் 21ம் பதிப்பானது. கோவை மற்றும் இந்தியாவை ஒரு சர்வதேச தொழில் உற்பத்தி மையமாக உருவாக்கும் பெரும் முயற்சியாகும். இதில் பங்கேற்கும் மாநிலங்களான கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற 13 மாநிலங்கள் பங்கேற்கின்றன. இதில் சிறப்பு விருந்தினராக

ஜின்கி லிட்டை கோ லிமிடெட் ஜப்பான் நிறுவனர் டாக்டர் கனோகா, கௌரவ விருந்தினர்களாக பொது மேலாளர் ரயில்வே அமைச்சகம் சென்னை யு சுப்பாராவ், ஆர் ஐ ஆர் பவர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மும்பை நிர்வாக இயக்குனர் என் ரமேஷ்குமார். மேலும் இதில் மெஷின் டூல் ஆக்சஸரீஸ், சிஎன்சி மிஷினரி மற்றும் உதிரி பாகங்கள், லேசர் கட்டிங், வானிலை இயந்திர பாகங்கள், சர்வ மோட்டார் பவர் டூல், கட்டிங் டூல், எலக்ட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ், இண்டஸ்ட்ரியல் பம்புகள் போன்றவை இடம்பெறுகின்றன. கண்காட்சி ஆனது ஜூன் நான்கு முதல் 8 வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

தூத்துக்குடியில்

## வாலிபர் வெட்டிக்கொலை: 3 பேர் கைது

தூத்துக்குடி, மே. 30

தூத்துக்குடி தாளமுத்துநகர், வண்ணாரப்பேட்டை ஆனந்த்நகர் பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் மாரிசெல்வம் (வயது 21). மீனவரான இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. மாரிசெல்வம் நேற்று காலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுவிட்டு, இரவு 10 மணியளவில் வேலை முடிந்து தனது மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். அவர் தாளமுத்துநகர் நேரு நகரில் உள்ள ஒரு கெபி அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரே தாளமுத்துநகர் சோட்டையன்தோப்பைச் சேர்ந்த சண்முககணேசன் மகன் சந்தனராஜ்(21) என்பவர் தனது மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்துள்ளார். அப்போது சந்தனராஜ், மாரிசெல்வத்தின் மோட்டார் சைக்கிள் மீது இடிப்பது போல் வண்டியை ஓட்டி வந்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் இருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு, ஆத்திரமடைந்த மாரிசெல்வம், சந்தனராஜை கையால் சரமாரியாக தாக்கியுள்ளார். உடனே அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் இருவரையும் சமாதானம் செய்து தனித்தனியே அனுப்பி வைத்தனர். மாரிசெல்வம் தன்னை தாக்கியதால் கடும் ஆத்திரமடைந்த சந்தனராஜ், அவரை பழிவாங்க திட்டமிட்டுள்ளார். மேலும் அவர் தனது நண்பர்களான அண்ணாநகர் 12வது தெருவைச் சேர்ந்த மாரிமுத்து மகன் புவனேஷ்குமார்(20), ஆனந்த்நகரை சேர்ந்த ராபர்ட் மகன் ஜாய்சன்(20) மற்றும் நேரு நகரைச் சேர்ந்த சண்முகம் மகன் ஹரிகரன்(20) ஆகிய 3 பேருடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மாரிசெல்வத்தைப் பழிவாங்கும் நோக்குடன் தீவிரமாக தேடி அலைந்துள்ளனர்.

அப்போது, நேருநகர் கெபி அருகே உள்ள ஒரு டீக்கடை முன்பு நின்று கொண்டிருந்த மாரிசெல்வத்தை 4 பேரும் சுற்றி வளைத்து, அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளனர். இதில் படுகாயமடைந்த மாரிசெல்வம், சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். பின்னர் 4 பேரும் மோட்டார் சைக்கிள்களில் அங்கிருந்து தப்பிவிட்டனர்.

இந்த கொலை சம்பவம் குறித்து தகவல் அறிந்த தூத்துக்குடி தாளமுத்துநகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அருளப்பன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாரிசெல்வத்தின் உடலைக் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து தனிப்படை அமைத்து தேடி வந்த நிலையில் சந்தனராஜ், அவரது நண்பர்களான ஜாய்சன் மற்றும் ஹரிகரன் ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள புவனேஷ்குமார் என்ற வாலிபரைத் தேடி வருகின்றனர். நள்ளிரவில் நடந்த இந்த கொடூர கொலைச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## டெல்டாவில் ஆகாயத்தாமரையை அகற்ற வேண்டும்: எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, மே. 30

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடும் முன்பே, அதாவது ஜூன் மாதம் 12ஆம் தேதிக்கு முன்பே டெல்டா மாவட்டங்கள் முழுவதும் உள்ள பாசன வாய்க்கால்கள், ஆறுகள், குளங்கள், வடிகால் வாய்க்கால்கள் போன்ற நீர்நிலைகள் அனைத்தும் தூர் வாரப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் தங்கு தடையில்லாமல் சென்றது. மேலும், மழைக் காலங்களில் நீர் நிலைகளில் தடுப்பின்றி வெள்ள நீர் வேகமாக வடிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறிப்பாக, 2011ஆம் ஆண்டு காலகட்டத்தில் டெல்டா மாவட்டங்களில் நெய்வேலி காட்டாமணக்கு' என்ற செடி நீர் நிலைகள் முழுவதும் ஆக்கிரமித்து பாசனத்திற்கு கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்வதில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து முழுமையாக அகற்றி, இன்றுவரை நெய்வேலி காட்டாமணக்கு என்ற செடி டெல்டா மாவட்டங்களில் எங்கும் இல்லை என்ற நிலையை உருவாக்கியது அம்மாவின் அரசு.

டெல்டா மாவட்டங்களில் எனது தலைமையிலான அம்மாவின் ஆட்சி காலத்தில் தூர் வாரும் பணியையும், ஆறுகளின் கட்டமைப்பு பணிகளையும், அந்தந்த பகுதிகளில் உள்ள பதிவு பெற்ற விவசாய சங்கங்களுக்கே வழங்கி, விவசாயிகளே தூர் வாரும் பணியை மேற்கொண்டதால், இப்பணி 100 சதவீதம் முறையாக நடைபெற்றது.

இவ்வாறு, அம்மாவின் அரசு, டெல்டா மாவட்டங்கள் முழுவதும் முறையாக தூர் வாரும் பணியை காலத்தே மேற்கொண்டதால், ஜூன் மாதம் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் கடைமடை பகுதிவரை சென்றதால், விவசாயிகளுக்கு எவ்வித சேதமுமின்றி விளைச்சல் பெருகி, அம்மா ஆட்சி காலத்தில் மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினை 6 முறை பெற்றோம்.

கடந்த ஆட்சி காலத்தில் டெல்டா மாவட்டங்களில் முறையாக தூர் வாரப்படவில்லை என்று சட்டமன்றத்திலும், பொதுவெளியிலும், நானும், எங்களது கழக சட்டமன்ற உறுப்பினர்களும் பலமுறை பேசியும் எந்த பயனும் இல்லை. இந்த ஆண்டும் (2026) தேர்தல் நடைபெற்று கொண்டிருக்கும்போதே, டெல்டா மாவட்டங்களில் 'சி' மற்றும் 'டி' வாய்க்கால்கள் அவசர கோலத்தில் தூர் வாரப்பட்டுள்ளது. இதனால் ஜூன் மாதம் மேட்டூர் அணையில் திறந்துவிடப்படும் தண்ணீர் முழுமையாக டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதிகளில் சென்றடையாமல் விவசாய பணிகள் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வடிகால்வாய்க்கால்கள்முறையாகதூர்வாரப்படாததால் மழை வெள்ள நீர் வடியாமல் விவசாயிகளுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும். மேலும், கொள்ளிடம் ஆறு, கோரையாறு, வெண்ணாறு போன்ற ஆறுகளில் இருந்து கிளைஆறுகள்பிரியும்தலைப்புகளில்ஆகாயதாமரையை தடுத்து நிறுத்தும் வகையில் தடுப்புகளை அமைத்து நிரந்தர தீர்வுகாண வேண்டும்.

எனவே, புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, டெல்டா மாவட்டங்களில் அனைத்து நீர் நிலைகளிலும் தேங்கி கிடக்கும் ஆகாயத் தாமரையை அகற்றி, இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை பகுதிவரை முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்திட வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.



## வேலூரில்
# அமமுகவைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் தவெகவில் இணைந்தனர்

வேலூர், மே 30

தமிழக வெற்றிக் கழக தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான தளபதி விஜய் தலைமையை ஏற்று மாநில பொதுச் செயலாளர் அமைச்சர் ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலோடு

வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன் முன்னிலையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாநில தகவல்தொழில்நுட்பபிரிவு துணைத் தலைவர் எஸ்டிகே.அருண் மற்றும்

நூற்றுக்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதில் தவெக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## காட்பாடியில்
# லூபின் டயக்னோஸ்டிக் (நோய் கண்டறிதல்) மையம் திறப்பு விழா

வேலூர், மே 30

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகரில் லூபின் டயக்னோஸ்டிக் (நோய் கண்டறிதல் ) மையம் திறப்பு விழா ஓட்டோமேடிக்ஸ் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது.

மையத்தின் தலைமை மனிதவள அலுவலர் கார்த்திகாசதீஷ் முன்னிலை வகித்தார். இவ்விழாவில் தவெக கிழக்கு மாவட்ட செயலாளர் ஆ.நவீன், காட்பாடி, வேலூர் எம்எல்ஏக்கள் மரு எம்.சுதாகர், எம்.எம். வினோத்கண்ணன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி வைத்து துவக்கி வைத்தனர். இம்மையத்தில் இருதயம், சிறுநீரகம், கல்லீரல், தைராய்டு, சர்க்கரை நோய் மற்றும் இரத்த பரிசோதனைகள் செய்து விரைவாகவும் துல்லியமாகவும் வழங்கப்படுகிறது.

அனைத்து மருத்துவர்களின் நம்பிக்கை பெற்ற மையமாகவும், சேகரிக்கப்படும் மாதிரிகள் பாதுகாப்பாகவும் வைக்கப்படுகிறது. மேலும் வீடுதேடி வந்து மாதிரிகள் சேகரிக்கும்வசதியும்உள்ளது.திறப்புவிழாவையொட்டி சிறப்பு சலுகை விலையில் மருத்துவ பரிசோதனைகள் குறிப்பிட்ட நாட்களுக்கு செய்யப்பட உள்ளது.



## உலக பட்டினி தினத்தை முன்னிட்டு
# இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் காட்பாடி ஏழை, எளிய மக்களுக்கு ஆதரவற்றோருக்கு அன்னதானம் வழங்கும் விழா

வேலூர், மே. 30

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் வள்ளிமலை முருகன் கோயில் அருகே உலக பட்டினி தினத்தை முன்னிட்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் காட்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.கணேஷ் ஜிகே தலைமை மற்றும் ஏற்பாட்டின் பேரில் கோவில் மற்றும் சாலையோரத்தில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு ஆதரவற்றோருக்கு அன்னதானம் வழங்கும் நடைபெற்றது. இதில் காட்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஜார்ஜ் (எ) இளங்கோவன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். உலகளவில் லட்சகணக்கான மக்கள் எதிர்கொள்ளும் நீண்டகாலப் பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் வறுமையை ஒழிப்பதற்கான நிலையான தீர்வுகளை காண கடந்த 2011ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## தென்காசி மாவட்டம்
# திருமலைக்கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் அருணாச்சலம் தலைமையில் திருமலைக்குமாரசாமி திருக்கோவில் வருடாபிஷேக விழா



தென்காசி,மே.30

தென்காசி மாவட்டம் பண்பொழி அருள்மிகு திருமலைக்குமாரசாமி திருக்கோவிலில் வருடாபிஷேக விழா நடைபெற்றது. அதனை முன்னிட்டு தங்கத்தேர் இழுக்கப்பட்டது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

தென் தமிழகத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற பண்பொழி அருள்மிகு திருமலை க்குமாரசாமி திருக்கோவில் இயற்கை எழிலோடு மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் சஷ்டி, தைப்பூசம், சூரசம்ஹாரம் உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில் 7ஆம் ஆண்டு வருடாபிஷேக விழா நடைபெற்றது. வருடாபிஷேக விழாவை முன்னிட்டு காலை அனுக்ஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், கும்பபூஜை, மஹா பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து

மூலஸ்தானம் மற்றும் பரிவார மூர்த்திகள், விமானங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மதியம் உச்சிகால பூஜை, தீபாராதனை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் தமிழக மற்றும் கேரளத்தை சேர்ந்த பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இவ்வழிபாட்டிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளும், அறங்காவலர் குழு தலைவர் அருணாச்சலம் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர். வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பண்பொழி திருமலைக்குமாரர் எழுந்தருளிய தங்கத் தேர் வடம்பிடித்து இழுக்கும் நிகழ்வு நடைபெற்றது.

விழாவில் நூற்றுக்க

ணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கத் தேரை வடம் பிடித்து இழுத்து

## ஈரோட்டில்
# அனுமதி இல்லாமல் செயல்பட்ட சாய தொழிற்சாலை இடித்து அகற்றம்

ஈரோடு மே 30

ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சாயம், சலவை, பிரிண்டிங் மற்றும் தோல் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. இந்த தொழிற்சாலைகளில் இருந்து சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியேற்றப்பட்டு நீர் நிலைகள் மாசு படுவதை தடுத்திட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஈரோடு மற்றும் பறக்கும் படை அலுவலர்களால் பகல் மற்றும் இரவு நேரங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் பூஜ்யநிலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை முறையாக பராமரிக்காத தொழிற்சாலைகள் மற்றும் கழிவுநீரை அருகிலுள்ள கால்வாயில் வெளியேற்றும் தொழிற்சாலைகளின் மின் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதனடிப்படையில், சமீபத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, நஞ்சை தளவாய்பாளையம் பகுதியில் இயங்கி வந்த ஒரு சாயத் தொழிற்சாலை மற்றும் சூரியம்பாளையம் பகுதியில் இயங்கி வந்த ஒரு தோல் தொழிற்சாலைகள் அதன் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை முறையாக இயக்காமல் இருந்தது கண்டறியப்பட்டது.இதை யொட்டி அந்த தொழிற்சாலைகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது . மேலும் பெரிய அக்ரஹாரம் பகுதியில் அனுமதி பெறாமல் ஒரு டையிங் தொழிற்சாலை செயல்படுவது கண்டறியப்பட்டது. இதை யொட்டி அந்த டையிங் பட்டறை இடித்து அகற்றப்பட்டது.



சென்னை,ஆவடி நந்தவன மேட்டூர் கன்னியம்மன் கோவில் தெருவில், அமைந்துள்ள ஸ்ரீதேவிகன்னியம்மன்ஆலய,புனராவர்த்தனஜீர்ணோத்தாரணநூதனஆலயஅஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் பராபவ வருஷம் வைகாசி மாதம் திரியோதசி நிதி சுவாதி நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் யாகசாலையில் மூன்று நாட்களாக சிவாச்சாரியார்களால் பூஜிக்கப்பட்ட புனித கலச நீரை வானவேடிக்கை, மங்கள வாத்தியம், மேளங்கள் முழங்க கோயில் கோபுர கலசத்தின் உச்சியின் மீது ஊற்றி பொதுமக்கள் மேல் தெளித்தனர். சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய நிர்வாகி முரளி ஆதிகேசவன் மற்றும் நிர்வாகிகள் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆபத்தான நிலையில் உள்ள மரத்தை அகற்ற கோரிக்கை!



அருமனை, மே. 30

ஆறுகாணி அருகே அணைமுகம் உட்கோட்ட சாலையில் ஆனக்குளம் பகுதியில் பெரிய காட்டு மரம் ஒன்று உலர்ந்த நிலையில் நீண்ட காலமாகநிற்கிறது. எந்த அதிகாரியுமே கண்டு கொள்ளவில்லை.

தற்போது கனமழை மற்றும் சூறைகாற்று வீசிவருவதால் சாலை செல்லும் பொது மக்கள் மீதும், மின் கம்பிகள், மீதும் மரம் முறிந்து விழும் அபாயம் உள்ளது. எனவே உடனடியாக மரத்தை அகற்ற துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர், மற்றும் ஊர் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




# திருப்பூர் கருப்ப கவுண்டம்பாளையத்தில் ஜேகே டாக்ஸி துவக்க விழா

திருப்பூர், மே 30

திருப்பூர் கருப்ப கவுண்டம்பாளையத்தில் ஜேகே கால் டாக்ஸி அறிமுக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் பொதுமக்கள் 80 ரூபாயில் காரில் பயணிக்க சிறப்பு ஏற்பாடும் 24 மணி நேரமும் வாடகை சேவை தொடங்கி இருப்பதாக நிறுவனர் போலீஸ் கார்த்திக் தெரிவித்தார்.

இதில் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் தொழிலதிபர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர் மேலும் வாகன

தொடர்புக்கு 0421_4433435, 9677885027 ஆகிய நம்பரை தொடர்பு கொள்ளலாம் எனவும் விரைவில் இதற்கெனதனியாக ஆப் ஒன்றை நிறுவ இருப்பதாக நிறுவனர் போலீஸ் கார்த்தி தெரிவித்தார்..

# கள் இறக்க அனுமதிக்க வேண்டும்
## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொது செயலாளர் பேட்டி



ஈரோடு மே 30

கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொது செயலாளர் ஈஸ்வரன் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது

தமிழக அரசு பெயரளவுக்கு பயிர்க்கடனை ரத்து செய்தது விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

முதல் அமைச்சர் விஜய் டெல்லி சென்று பிரதமரை சந்தித்து என்ன பேசினார் என்பதை தமிழக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு பாலியல் தொல்லை போன்ற பிரச்சினைகளுக்கு உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோபி பொள்ளாச்சி ஆத்தூர் ஆகியவற்றை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ராஜினாமா செய்தால் 5 ஆண்டுகள் தேர்தலில்


நிற்க கூடாது என்று சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். மது பட்டியலில் வராத கள்ளை இறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் மற்றும் நகரம், சிவராஜ்பேட்டை கோவிலூர் ரோடு, க.எண். 4/6A என்ற முகவரியைச் சேர்ந்த மு.கோவிந்தன் த/பெ முனிசாமி (லேட்) எனும் நான், எனது தந்தை நா.முனிசாமி த/ பெ நாகன் என்பவர் 22.04.2022 தேதியில் இறந்ததைப் பதிவு செய்ய விண்ணப்பம் செய்துள்ளேன். இது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின், இவ்விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர், திருப்பத்தூர் அவர்களிடம் எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

# காயிதே மில்லத் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள அழைப்பு



திருப்பூர்:மே30

பல்சமய நட்புறவு கழகத்தின் திருப்பூர் மாவட்ட தலைவர் ஷாஜஹான்

தமிழக வெற்றி கழகத்தின் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினரும் மாநகர் மாவட்ட செயலாளருமான பாலமுருகன் அவர்களையும் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் சகோதரர் குத்புதீன் அவர்களையும் சந்தித்து கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்வியல் புத்தகம் வழங்கப்பட்டது. சென்னையில் தமிழக அரசின் சார்பாகநடைபெற இருக்கின்ற கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொண்டோம்..

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.